1994 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இது பொதுவான கேள்வி அல்ல. (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டம் முழுவதும் சோழன் போக்குவரத்துக்கழகத்தினுடைய பேருந்துகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கே ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகள் யாவும், நகரப் பேருந்துகள் யாவும், மிகமிக மோசமாகப் பழுது அடைந்து இருப்பதால், அவைகளைப் புதிதாக மாற்றுவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாம். அந்த ரூட்டிலே பஸ் போவதைப் பற்றி வேண்டுமனால் கேட்கலாம். (குறுக்கீடு). இந்த மாதிரி உங்களை அனுமதித்தால், மற்ற எல்லா உறுப்பினர்களையும் நான் அனுமதிக்கவேண்டியது வரும். (குறுக்கீடு). அது வேண்டாம். (குறுக்கீடு). அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம். ஒரு தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு இன்னொரு உறுப்பினரைக் கேள்வி கேட்க அனுமதித்தால், பிறகு எல்லோரும் கேட்பார்கள். அந்த ரூட்டுக்கு இடையிலே ஒரு கிராமம் வருகிறது. அதற்குப் பஸ் போகுமா என்று கேட்டால், அது சரியாக இருக்கும். (குறுக்கீடு). அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 26, திருமதி. க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

26—

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைத்தல்.

*22426—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நூற்பாலைகள் திறம்பட செயல்பட உதவும் வகையில் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஒன்று அமைத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (பல்வகை) எண். 159, கை. து. ம. கதர் துறை, நாள் 22—6—1993-இல் கூட்டுறவு நூற்பாலைகள் திறம் பட செயல்படும் வகையில் கைத்தறி துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் ''தொழில் நுட்ப ஆலோசனைக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எல்லாத் துறைகளுமே சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, தனியார் நூற்பாலைகள் லாபத்தில் நடந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில் கூட கூட்டுறவு நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதைச் சரி செய்வதற்காக, தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைத்த, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலான அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவில், எத்தனை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள், அவர்களில் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 18 நூற்பாலைகளில், ஏறத்தாழ 4, 6 நூற்பாலைகளைத் தவிர, அனைத்து நூற்பாலைகளும் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில், 1992—93 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் போது இதய தெய்வம் அவர்கள் சில ஆலோசனைகளை வழங்கினார்கள். அந்த ஆலோசனைகளுக்கிணங்க கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே கைத்தறித் துறையினுடைய செயலாளர் அவர்கள் செயலாளராகவும், நிதித் துறையினுடைய செயலாளர் உறுப்பினராகவும், ஆணையர் அவர்கள் ஆர்கனைசராகவும் ''சைமா''வினுடைய தலைவர் அங்கத்தினராகவும், டி. வி. ரத்தினம், சிட்ரா டைரக்டர் உறுப்பினராகவும், அனந்தபத்மநாபன், தேசிய பஞ்சாலைக் கழகத்தினுடைய இயக்குநர் அவர்கள் உறுப்பினராகவும், ஜயவர்த்தனவேலு, நிர்வாக இயக்குநர் எல். அண்டு டபிள்யூ. அவர்கள் அங்கத்தினராகவும், ராமசாமி ராஜா, நிர்வாக இயக்குநர், ராஜபாண்டியன் மில்லினுடைய தலைவர் அங்கத்தினராகவும், தினகரன், நிர்வாக இயக்குநர் ராமலிங்கம் மில்ஸ், அருப்புக்கோட்டை, அங்கத்தினராகவும்

ராமசாமி, நிர்வாக இயக்குநர், ராயல் டெக்ஸ்டைல்ஸ், கோவில்பட்டி அங்கத்தினராகவும், சுப்பையா, நிர்வாக இயக்குநர், கருணைபாண்டியன் மில்ஸ், கோவை அங்கத்தினராகவும், கலீல் நிர்வாக இயக்குநர் ரத்னவேலு டெக்ஸ்டைல்ஸ், கோவை மற்றும் திரு. கண்ணன் முன்னாள் தலைவர், சைமா உறுப்பினர்களாகவும், டமான் பிரகாஷ், நிர்வாக இயக்குநர், சம்பா டெக்ஸ்டைல்ஸ் உறுப்பினராகவும் இது போன்ற 15 பேரை அங்கத்தினர்களாகக்கொண்ட ஒரு நிபுணர் குழு புரட்சித் தலைவியினுடைய ஆலோசனைகளுக்கிணங்க நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்களா என்பதை அறிய விரும்புவதோடு, இந்தக் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான ''கைடு லைன்ஸ்'' தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் சிறந்த முறையில் நூற்பாலைகள் நடத்தி வருகின்ற ஐயவர்த்தனவேலு, எல். அண்டு டபிள்யூ. போன்றவர்களும், சைமா, சிட்ரா போன்ற அமைப்புகளின் தலைவர்களும் இதில் அங்கம் பெற்றிருக்கிறார்கள். ''சைமா'' என்றால் ''சவுத் இந்தியா மில்ஸ் அசோசியேஷன்'' சிட்ரா போன்ற அமைப்புகளைச் சார்ந்த சிறந்த ஆற்றல் படைத்தவர்களை எல்லாம் இதில் போட்டிருப்பதால் எதிர்காலத்தில் நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் -இப்போதே சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றன—செயல்படும். பருத்தி பற்றாக்குறையின் காரணமாகத் தான்—அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை அந்த சட்டச் சிக்கலுக்குள்—அதன் காரணமாகத்தான் நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை நான் உங்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 27, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

27—

நிலக்கோட்டை தொகுதி, பேரணைப் பாலத்தைச் செப்பனிடுதல்

* 9761—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, பேரணையில் கட்டப்பட்ட பாலம் எப்போது கட்டப்பட்டது?